**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2025-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் நாள் வியாழக்கிழமை

**<u>O.S. No.135/2024</u>**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1 வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A. LL.B., (HONS) மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகம்மது பரூக் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | அப்துல் ஹமீது | கிராமம் | : | அபிவிருத்தீஸ்வரம் |
| | | | தொழில் | : | விவசாயி |
| | | | வயது | : | 77 |

**<u>2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் எனது நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் எனக்கு ஏற்பட்ட நஷ்ட தொகையை கோரி மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எனது உரிமையை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் செலவு செய்ததாக காட்டும் என்னென்ன ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அனைத்து ரசீதுகளையும் நான் கொடுத்துள்ளேன். நான் அனைத்து ரசீதுகளையும் எனது வழக்கறிஞரிடம் கொடுத்தேன். நான் செய்த செலவுகளை பொறுத்து மட்டுமே வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கு சொத்தின் அனுபவத்தை அல்லது உரிமையை பொறுத்தோ வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்துக்களுக்கு எந்தவித செலவுகளையும் செய்யவில்லை என்றாலும் தாவா சொத்தின் அனுபவத்தை காட்டும் ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல. 1 முதல் 9 பிரதிவாதிகள் எனது உறவினர் என்றால் சரிதான். எனது வழக்குரையின் முதல் அயிட்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே

எண்.70/2A1 அதன் விஸ்தீரணம் சுமார் 2 ஏக்கர் ஆகும். நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியும். எனது வழக்கின் முதல் அயிட்ட சொத்து 51/1B என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் நான் தவறுதலாக 70/2A1 குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரிதான். எனக்கு வழக்கின் சொத்துக்களின் சர்வே எண்கள் அனைத்தும் தெரியும். எனது வழக்கின் முதல் அயிட்ட சொத்தின் 51/1B விஸ்தீரணம் தெரியுமா என்றால் 3 ஹெக்டேர் 95 ஏர்ஸ் ஆகும். முதல் அயிட்ட சொத்து எனக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரிதான்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.27 15:43:30 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal